செ.வெ.எண் : 261 நாள் : 11.06.2021

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அலுவலக மாநாட்டுக் கூட்ட அரங்கத்தில் 10.06.2021 அன்று மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது. இவ்வாய்வுக் கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.டி.எஸ்.ஜவகர், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர், திரு.அ.ஞானசேகரன், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர்கள், மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் கால்நடை பராமரிப்புத்துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு பணிகள் மற்றும் திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்கு கால்நடைகளின் பங்கு மிக முக்கிய இடம் வகிப்பதால், தற்போது உள்ள கொரோனா பெருந்தொற்று சூழலிலும் கால்நடை வளர்போர் பாதிக்கா வண்ணம் கால்நடை பராமரிப்புத்துறையின் செயல்பாடுகள் அமைய வேண்டும் என அறிவுறுத்தினார்.

மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் கால்நடை பராமரிப்புத் தொழில் தென் மாவட்டங்களில் செவ்வனே நடைபெற நிலப்பரப்பிற்கு ஏற்ற கால்நடை பராமரிப்புத் தொழிலை ஊக்குவிக்கும் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினார். இதன் மூலம் கிராமங்களில் இருந்து மக்கள் நகரங்களுக்கு

புலம் பெயர்வது குறைந்து அவர்களின் பொருளாரதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என தெரிவித்தார். தென்மாவட்டங்களில் ஆடுவளர்ப்புத் தொழிலில் அதிக விவசாயிகள் ஈடுப்பட்டு வருவதால், ஆடுகளின் நலத்தை பேணும் வகையில் காலமுறைப்படி குடற்புழுநீக்கம் மற்றும் தடுப்பூசிப்பணி மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார். தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் கோழி வளர்ப்பு தொழில் முனைப்புடன் நடைபெறுவது போல், பண்ணை முறை கோழிவளர்ப்பு தென் மாவட்டங்களில் ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதற்காக துறையின் பண்ணைகளில் கோழிக்குஞ்சுகள் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளுக்கு வழங்குவதற்காக துறையின் செயல்பாடுகள் இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கால்நடை பாதுகாப்பு திட்டம் முதன் முதலில் செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றத்தில் **18.01.2000**–ல் தொடங்கப்பட்டு தற்போது வரை செயல்பாட்டில் உள்ளது. இம்முகாம்கள் மூலம் அதிக அளவில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் சிறந்த முறையில் நடத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தினார். இம்முகாம்களில் மலடு நீக்கம், மடிநோய் கண்டறிதல், தொடர் சிகிச்சை அளித்தல் போன்றவைகளுடன் சிறந்த உற்பத்தி முறைகள் பற்றிய கண்காட்சி கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். மேலும் துறையின் செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வினை தொலைகாட்சி மற்றும் வானொலி மூலமாக மக்களிடம் எடுத்துரைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் கன்றுகள் பிறப்பு விகிதத்தை அதிகரித்து, அதன் மூலம் பால் உற்பத்தி மற்றும் விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்திட, செயற்கை முறை கருவூட்டல் பணியை

விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே சிகிச்சை மற்றும் இதர சேவைகள் வழங்க நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள் ஏற்படுத்த வேண்டும் என்றும், அன்றாட சிகிச்சைப்பணிக்குத் தேவைப்படும் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் போதிய அளவில் உள்ளதா எனக் கண்டறிந்து தேவைப்படின் அரசிற்கு பிரேரணைகள் அனுப்பிட அறிவுறுத்தினார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியம் என்றும், கள ஆய்வு அலுவலகங்கள் மற்றும் மருந்தகங்கள், மருத்துவமனைகள், ஆய்வுக்கூடங்கள் போன்றவற்றுக்கு தேவைப்படும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திட நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் 13 பண்ணைகளை மேம்படுத்த வேண்டும் என தெரிவித்தார். அனைத்து பண்ணைகளின் நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், பண்ணை குட்டைகள் ஏற்படுத்துதல், உயர் மரபியல் திறன் கொண்ட கால்நடைகள் கொள்முதல் செய்தல், உற்பத்தி பெருக்குதல், பசுந்தீவன உற்பத்தி மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தினார். கால்நடைகளின் உற்பத்தி திறனை அதிகரிக்க பசுந்தீவனம் மிக முக்கிய பங்கு வகிப்பதால், கிராம அளவில் பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், பசுந்தீவனத் தட்டுப்பாட்டினை அகற்ற மேய்க்கால் நிலங்களை கண்டறிந்து உள்ளாட்சித்துறையின் ஒத்துழைப்போடு தீவன உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அதிகரிக்க அறிவுறுத்திய நோக்கத்தின் அடிப்படையில்,

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பல்வேறு நிலையிலுள்ள 14,029 பதவிகளில், 5,834 பதவிகள் காலியாக உள்ளதால் இவ்வரசின் முத்தாய கடமையான மக்களுக்கு வேலைவாய்ப்பினை அதிகரிப்பது என்பதை கருத்தில் கொண்டு, காலியாக உள்ள அனைத்து பதவிகளையும் நிரப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் சொல்லப்பட்ட இத்துறை சம்பந்தமான அனைத்து திட்ட அறிக்கைகளும் அரசிற்கு பிரேரணைகள் விரைவாக அனுப்பிட அறிவுறுத்தினார். மேலும், பால், முட்டை, இறைச்சி ஆகியவைகளின் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் வருமானம் உயர வழிவகை செய்திட அனைத்து நடவடிக்கைகளும் துறை துரிதமாக எடுக்க அறிவுறுத்தினார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9